# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2009 / 2010
## HELD IN DECEMBER - 2010

## ECS 2.21 – INTERMEDIATE MACROECONOMICS

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த தேசிய உற்பத்தி என்பனவற்றை வேறுபடுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) "APC எப்போதும் $0 \leq APC \leq 1$ என காணப்படும்" விளக்குக (04 புள்ளிகள்)

(இ) "தன்னிச்சையான நுகர்வு எப்போதும் செலவிடக்கூடிய வருமானத்துடன் நேர்க்கணியத் தொடர்பைக் கொண்டுள்ளது". இக்கூற்றுடன் உடன்படுகிறீரா? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(ஈ) பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி பணவீக்க இடைவெளி, பணச்சுருக்க இடைவெளி ஆகியவற்றை வேறுபடுத்துக. (08 புள்ளிகள்)

(உ) திறந்த பொருளாதாரமொன்றில் உட்செலுத்தல் காரணிகளை அடையாளம் காண்க. (02 புள்ளிகள்)

02. நுகர்வுத் தொழிற்பாட்டில் கெயின்ஸிக்குப் பிற்பட்ட அபிவிருத்திகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

03. (அ) "பணத்துக்கான கேள்வி" என்பதனால் நீர் கருதுவது யாது? (03 புள்ளிகள்)

(ஆ) பணத்தின் கொள்வனவு சக்தியை பணத்தின் சுற்றோட்ட வேகத்திலிருந்து வேறுபடுத்துக. (05 புள்ளிகள்)

(இ) பழம் பொருளியல் மாதிரிகளுடன் ஒப்பீடும்போது கெயின்ஸிய நாணயக்கணியக் கோட்பாடு எவ்வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை விளக்குக (12 புள்ளிகள்)

04. (அ) LM வளையி என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) IS, LM வளையிகள் பெறப்படும் முறையை விளக்குக (10 புள்ளிகள்)

(இ) "LM கோட்டின் வழியே வருமானம், வட்டிவீதம் என்பனவற்றிற் கிடையிலான தொடர்பு எப்போதும் நேர்க்கணியமாகக் காணப்படும்" ஏன்? (04 புள்ளிகள்)

(ஈ) திரவப் பொறிநிலை என்பதனால் கருதப்படுவது யாது? (04 புள்ளிகள்)

05. (அ) கேள்வித்தூண்டல் பணவீக்கத்தை செலவத்தூண்டல் பணவீக்கத் திலிருந்து வேறுபடுத்துக. (05 புள்ளிகள்)

(ஆ) கேள்வித்தூண்டல், செலவுத்தூண்டல் பணவீக்கங்களுக்கான காரணங்களைப் பட்டியல்படுத்துக. (05 புள்ளிகள்)

(இ) இலங்கையின் அண்மைக்கால பணவீக்கத்திற்கான காரணிகளை விளக்குக (10 புள்ளிகள்)

06. (அ) AD, AS வளையிகள் எதனைக் குறிக்கின்றன. (06 புள்ளிகள்)

(ஆ) AD, AS வளையிகள் எவ்வாறு பெறப்படுகின்றன? (10 புள்ளிகள்)

(இ) அரசாங்கத்தினது இறை விரிவாக்கக் கொள்கை AD, AS சமநிலை மீது ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

07. (அ) முதலீட்டுப் பெருக்கிக்கும் MPS க்கும் இடையிலான தொடர்பை விளக்குக. (04 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் பெருக்கிகளை சுருக்கமாக குறிப்பிட்டு தேசிய வருமானத்தின் மீது அவை ஒவ்வொன்றினது தாக்கங்களையும் விளக்குக.

1. ஏற்றுமதி பெருக்கி
2. இறக்குமதிப் பெருக்கி
3. வரிப் பெருக்கி
4. மாற்றல் கொடுப்பனவுப் பெருக்கி

($4 \times 4 = 16$ புள்ளிகள்)

08. இலங்கையில் 1978ம் ஆண்டிற்குப் பிறகு பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளில் இறைக்கொள்கையின் பங்களிப்பை மதிப்பீடுக.

(20 புள்ளிகள்)